# 8

# இயேசுவின் ஊழியத்தின் தொடக்கம்

## (4:12-25)

*இயேசு சாத்தானால் சோதிக்கப்பட்ட பின்பு (4:1-11), ஆனால் ஏரோது அந்திப்பாவினால் யோவான் பிடிக்கப்பட்டு சிறையில் அடைக்கப் படுவதற்கு முன்பு (4:12; காண்க 14:3-5), இயேசு யோவான் 1:19-3:36ல் பதிவு செய்யப்பட்டுள்ள தமது ஊழியத்தில் ஈடுபட்டார். மாற்கு மற்றும் லூக்கா ஆகியோருடன் மத்தேயு அந்த காலவேளையை பற்றி எழுதாமல் கடந்து சென்றார்.*

*இந்தப் பகுதி (4:12-25), இயேசுவின் ஊழியத்திற்கு ஒரு அறிமுகம் என்ற வகையில் செயல்படுகிறது மற்றும் இது மலைப்பிரசங்கத்திற்கு வழிநடத்துகிறது (5:1-7:29). கப்பர்நகூமில் இயேசு வாசம்பண்ணியது, வேதவாக்கியத்தின் நிறைவேற்றம் என்ற வகையில் மத்தேயு சித்தரித்தார் (4:12-17), நான்கு சீஷர்களை அழைத்ததைப் பதிவு செய்தார் (4:18-22) மற்றும் அவரது ஊழியம்பற்றியும் அதினால் செயல்தாக்கம் பெற்ற வட்டாரங்கள் பற்றியும் ஒரு தொகுப்புரையை அளித்தார் (4:23-25).*

### கப்பர்நகூமில் வாசம்பண்ணுதல் (4:12-17)

***12**யோவான் காவலில் வைக்கப்பட்டான் என்று இயேசு கேள்விப்பட்டு,
கலிலேயாவுக்குப் போய், **13**நாசரேத்தை விட்டு, செபுலோன் நப்தலி என்னும்
நாடுகளின் எல்லைகளிலிருக்கும் கடற்கரைக்கு அருகான கப்பர்நகூமில்
வந்து வாசம்பண்ணினார். **14**கடற்கரையருகிலும் யோர்தானுக்கு
அப்புறத்திலுமுள்ள செபுலோன் நாடும் நப்தலி நாடும் ஆகிய புறஜாதி
யாருடைய கலிலேயாவிலே,*

> ***15**இருளில் இருக்கும் ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்;*
> *மரண இருளின் திசையிலிருக்கிறவர்களுக்கு வெளிச்சம் உதித்தது*
> *என்று,*
> ***16**ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி*
> *இப்படி நடந்தது.*

***17**அதுமுதல் இயேசு: மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது
என்று பிரசங்கிக்கத் தொடங்கினார்.*

***வசனம் 12.*** *கிறிஸ்துவின் ஊழியத்தின் இந்த இடத்தில்,* ***யோவான் காவலில் வைக்கப் பட்டாலும்*** *அந்தச் சிறைவைத்தல் பற்றிய விபரங்களை மத்தேயு 14:1-12 வசனப்பகுதி வரையிலும் கூறாது இருப்பில் வைத்திருந்தார். யோவானைப் பற்றிய செய்தியை* ***இயேசு கேள்விப்பட்டு, கலிலேயாவுக்குப் போய் அங்கே தங்கினார்.*** *இந்தப் பின்வாங்குதலுக்கான மிகச்சரியான காரணம் தரப்படவில்லை. ஆங்கில வேதாகமத்தில் இங்கு* "withdraw" *என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வினைச்சொல்லானது* "leave" *அல்லது* "depart" *என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, இது அபாயமான சூழ்நிலைகளில் விரும்பித் தப்பித்தல் என்பதை விளக்கப்படுத்த, மத்தேயு சுவிசேஷத்தில் அடிக்கடி பயன்படுத்தப்பட்டுள்ளது (2:12-14, 22; 12:15; 14:13; 15:21). இந்த வேளையில், யோவானுடைய ஊழியத்துடன் இணைவு கொண்டிருந்தவர்கள், அவர் பிரசங்கித்திருந்த பகுதியில் இருந்து தூரம் செல்லுதல் என்பது சூழ்நிலைக்கு ஏற்றதாக இருந்ததா? அனேகமாக இல்லை என்றே கூறலாம் - ஏனெனில் (யோர்தானுக்கு அப்புறத்தில் இருந்த) பெரேயாவில் யோவானைக் கைது செய்த ஏரோது அந்திப்பாதான், இயேசு சென்ற கலிலேயாப் பகுதியையும் ஆளுகை செய்தார். லியோன் மோரீஸ் அவர்கள் கூற்று நோக்கியுள்ளபடி, "யோவானுடைய ஊழியம் முடிந்த வேளையில் இயேசு, தமது சொந்த ஊழியம் தொடங்குவதற்கு காலம் வந்ததென்று கண்டிருக்க அதிகம் சாத்தியக்கூறு உள்ளது; வனாந்தரத்தில் யோவான் தமது ஊழியத்தைச் செய்திருக்க, இயேசு தமது ஊழியத்தை, கலிலேயாவில் இருந்த மக்கள் மத்தியில் செய்வார்."[1]*

*இயேசு தமது ஊழியத்தின் கவனக்குவிப்பு இடமாக, யூதேயா மற்றும் பரிசுத்த நகரமாகிய எருசலேம் ஆகியவற்றிற்கு மாறாக, இந்தக் பகுதியைத் தேர்ந்து கொண்டார். யூதேயாவில் வாழ்ந்த மக்கள், தங்கள் கலிலேய சகோதரர்களைப் பின்தங்கியவர்கள் என்றும் கல்வியறிவு இல்லாதவர்கள் என்றும் கீழ்மையாகக் கண்ணோக்கினர் (26:69, 73; யோவான் 7:41, 52; நடபடிகள் 2:7; 4:13). இருந்த போதிலும் தேவன் அடிக்கடி, "ஞானிகளை வெட்கப்படுத்தும்படி ... உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார்" (1 கொரிந்தியர் 1:27).*

***வசனம் 13.*** *இயேசு தமது சொந்த ஊரான (2:23)* ***நாசரேத்துக்குத்*** *திரும்பி வந்தார். இருப்பினும் குறுகிய காலத்திலேயே அவர் அந்த இடத்தைவிட்டுப் புறப்பட்டார் - ஒருவேளை இது அங்கிருந்த மக்கள் அவரைப் புறக்கணித்த காரணத்தினால் நடந்திருக்கலாம் (லூக்கா 4:16-31)[2] - மற்றும்* ***கடலோரமாக இருந்த கப்பர்நகூமைத்*** *தமது செய்பாடுகளின் அடித்தளமாக நிலைநாட்டினார். இந்த நகரம் பிற்பாடு "தம்முடைய இயேசுவின் சொந்த பட்டணம்" என்று குறிப்பிடப் பட்டுள்ளது (9:1). இது,* ***செபுலோன் மற்றும் நப்தலி*** *ஆகிய கோத்திரங்களுக்குத் தொடக்ககாலத்தில் பங்களிக்கப்பட்ட பகுதியில் இருந்தது.*

*கலிலேயாக் கடலின் தென்மேற்கு முனையில் உள்ள றெல் ஹம் என்ற இடம்தான் கப்பர்நகூம் இருந்த இடம் என்று மிகவும் அறிவு முனைப்புடன் கருதப்படுகிறது. 1905ல் பிரான்சிஸ்கன்கள் இந்த இடத்தை முற்றிலுமாக அகழ்வாராய்ச்சி செய்து, உண்மையில் இந்த இடம்தான் பழங்காலத்தில் கப்பர்நகூம் என்ற பட்டணம் இருந்த இடம் என்பதற்கு நம்பத் தகுந்த ஆதாரங்களைக் கொடுத்தனர். "கப்பர்நகூம்" என்பது "நாகூம் என்பவரின் கிராமம்" என்று அர்த்தப்படுகிறது, மற்றும் இது பழைய ஏற்பாட்டில் உள்ள*

*அந்தப் பெயர்கொண்ட தீர்க்கதரிசியின் சொந்த ஊராக இருந்திருக்கலாம். "நாகூம்" என்றால் "இரக்கமுள்ள" என்று அர்த்தப்படுகிறது. இந்த கிராமத்தில் இருந்த மக்களின், பராமரித்துக் கவனிக்கும் நிலைப்பாட்டின் காரணமாகவும் இந்தப் பெயர் தரப்பட்டிருக்கக் கூடும்.*

*இயேசுவின் பிரசங்கித்தல் மற்றும் போதித்தல் ஆகியவற்றிற்கு, கப்பர்நகூம் ஒரு மைய இடத்தை அளித்தது. இது, கின்னரேக் கடல் (எண்ணாகமம் 34:11), கெனசெரேத்துக் கடல் (லூக்கா 5:1) மற்றும் திபேரியாக் கடல் (யோவான் 21:1) என்றும் அழைக்கப்பட்ட கலிலேயாக் கடலின் அருகில் அமைந்து இருந்தது. இந்தக் கடல் பெரிய அளவில் தண்ணீர் கொண்டதாக இருக்கவில்லை. இன்றைய நாட்களில் இது வடக்கில் இருந்து தெற்காக சுமார் பதிமூன்று மைல்கள் நீளமும், கிழக்கில் இருந்து மேற்காக அகலமான பகுதியில் எட்டு மைல்கள் அகலமும், கொண்டதாக உள்ளது. கடல் மட்டத்தில் இருந்து, இது ஏறக்குறைய எழுநூறு அடிகள் தாழ்வாக உள்ளது. இதன் கரைகளைச் சுற்றிலும், பலஸ்தீன நாட்டின் முதன்மையான மக்கள்தொகை அதிகம் கொண்ட ஒன்பது நகரங்கள் வரிசையாக இருந்தன, இவற்றில் திபேரியா மாத்திரமே இன்றைய நாட்களில் நிலைத்துள்ளது.*

***வசனம் 14.*** *கப்பர்நகூமுக்கு இயேசு சென்றது தற்செயலானதல்ல, ஆனால்* ***தீர்க்கதரிசியான ஏசாயாவினால் உரைக்கப்பட்டதை நிறைவேற்றுவதாக இருந்தது*** *என்று மத்தேயு சுட்டிக்காண்பிக்கிறார். அடுத்து வரும் சில வசனங்களில் மத்தேயு குறிப்பிட்ட தீர்க்கதரிசனம் ஏசாயா 9:1, 2ல் இருந்து வந்துள்ளது.*

***வசனம் 15.*** *கப்பர்நகூம் ஊரில் முக்கியமான சாலைகள் ஒன்று குவிந்தன. இந்த ஊர், சீரியாவில் இருந்து எகிப்துக்குச் செல்லும் முதன்மை வணிகச் சாலையான,* ***கடலுக்குச் செல்லும் சாலை*** *என்று அழைக்கப்படும் சாலையை மகிழ்வுடன் அனுபவித்தது (ஏசாயா 9:1). கலிலேயாவை அதிகம் திட்டவட்டமாகக் குறிப்பிட்ட* A. *ஹேங்கர் அவர்கள், பின்வருமாறு விளக்கப்படுத்தினார்:*

> *"கடலுக்குச் செல்லும் வழி" என்பது ... மத்தியதரைக் கடல் கரையில், தமஸ்குவை செசரியாவுடன் இணைத்த, ரோமானியச் சாலையாக* (the *via maris*) *இருந்தது, இதன் கிளைச் சாலைகளில் ஒன்று, இயேசுவின் ஊழியத்தில் திறவுகோல் நகரங்களாக இருந்த, பெத்சாயிதா மற்றும் கப்பர்நகூம் ஆகியவற்றின் ஊடே கலிலேயாக் கடலில் மேற்குக் கரைவழியாகச் சென்றது.*[3]

*கப்பர்நகூம் ஊரானது, பலஸ்தீனத்தின் மிக அதிகமாக மக்கள் தொகை குடியிருந்த ஊராகவும் இருந்தது. கலிலேயாவின் ஆளுநராக இருந்த, யூத வரலாற்றாளரான யோசிப்பஸ் என்பவர், அந்தப் பகுதியில் 240 கிராமங்களும் நகரங்களும் இருந்ததாகவும், அவற்றில் எதுவும் பதினைந்தாயிரத்திற்குக் குறைவான மக்கள் தொகை கொண்டிருக்கவில்லை என்றும் எழுதினார்.*[4]

*கலிலேயாவின் மக்கள்தொகை பல்வேறு நாடுகளைச் சேர்ந்ததாக இருந்தது. கி.மு. எட்டாம் நூற்றாண்டு முதல் இரண்டாம் நூற்றாண்டு வரையிலும், இந்த ஊரில் புறஜாதியார் அதிகமாக வாழ்ந்து இதைக் கட்டுப்படுத்தியதாலும் இதைச் சுற்றிலும் புறஜாதி மக்களினங்கள் இருந்தாலும், இது* ***புறஜாதியாருடைய கலிலேயா*** *என்று அறியப்பட்டிருந்தது (ஏசாயா 9:1). இதன் வடக்கிலும் கிழக்கிலும் சீரியா இருந்தது, மேற்கில் பெனிக்கியரின் சந்ததிகளும் தெற்கில்*

சமாரியர்களும் இருந்தனர். முற்காலத்தில் கலிலேயா புறஜாதியார்களாலே ஊடுருவப்பட்டிருந்தது, அப்போது சாலொமோன், தீருவின் இராஜாவான ஈராமுக்கு, கலிலேய நகரங்கள் இருபதைக் கொடுத்தார் (1 இராஜாக்கள் 9:11). மேலும், இந்த நிலப்பகுதியைப் பெற்றுக்கொண்டிருந்த இஸ்ரவேல் மக்கள் தங்களுக்கு முன் இந்தப் பகுதியில் இருந்த புறஜாதியாரை முற்றிலுமாகத் துரத்தி இருக்கவில்லை (நியாயாதிபதிகள் 1:30, 33). பலஸ்தீனத்தின் வேறெந்தப் பகுதிகளைப் போலின்றி, கலிலேயா பல்வேறு கலாச்சாரங்கள் மற்றும் பழக்க வழக்கங்களினால் செல்வாக்குச் செலுத்தப்பட்டிருந்தது. இவைகள் "மாற்றங்களுக்குத் தங்களை ஒப்புக்கொடுத்தவர்களாகவும் கிளர்வுகளில் மகிழ்ச்சி கொண்டவர்களாகவும், எப்போதும் புதுமைகள் மீது விருப்பம் கொண்டிருந்தனர்" என்று யோசிப்பஸ் கூறினார்.[5]

**வசனம் 16.** இங்கு குறிப்பிடப்பட்ட தீர்க்கதரிசனம் (ஏசாயா 9:2), இந்தப் பகுதியானது அசீரியர்களால் சூறையாடப்பட்டு ஆவிக்குரிய **இருளுக்குள்** தூக்கியெறியப்பட்ட நிலையில் தேவனை சத்தியத்தின் **வெளிச்சத்தைக்** காண்பார்கள் என்பதை முன்கண்ணோக்கிற்று. உலகத்திற்கு வரவிருந்த இந்த வெளிச்சம் முதலில் யூதா அல்லது எருசலேமில் பிரகாசிக்காது, ஆனால் இருளான இந்தப் பகுதியில் முதலில் காணப்படும் என்று தீர்க்கதரிசி உறுதிப்படுத்தியிருந்தார். "இருள்" என்ற வார்த்தை, ஆவிக்குரிய பார்வையற்ற தன்மை, ஒழுக்கக் கேடு அல்லது நம்பிக்கை இழந்த நிலையில் உள்ள மனச்சோர்வு என்பதை விவரிக்கிறது. இதன் எதிர்ச்சொல்லான "வெளிச்சம்" என்பது, ஆவிக்குரிய உள்கண்ணோக்கு அல்லது அறிவு, ஒழுக்கமான வாழ்வு மற்றும் சந்தோஷம் ஆகியவற்றைக் குறிக்கிறது. இந்தப் பகுதிக்கு இயேசுவின் வருகை, இதன் மீது நீண்டகாலமாகத் தொங்கியிருந்த இருளான திரையை நீக்கிப்போட்டு, இதை சத்தியத்தின் வெளிச்சத்தினால் ஒளியூட்டும், இயேசுதாமே "ஒளியாக" இருப்பார் (யோவான் 1:4, 8, 9; 3:19; 8:12; 12:46).

இயேசு சென்றடைந்த **மக்கள்** யூதர்களாக இருந்தனர். மக்களினத்தை அடையாளப்படுத்துவதற்கு இந்தக் கிரேக்கச் சொற்றொடரை மத்தேயு அடிக்கடி பயன்படுத்துகிறார் (1:21; 2:4, 6; 4:23; 9:35; 13:15; 15:8; 21:23; 26:3, 5, 47; 27:1, 25, 64). "காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு" செல்லுதல் என்பதே இயேசுவின் ஊழியத்தினுடைய இலக்காக இருந்தது (10:6; 15:24). இந்த யூதர்கள், "புறஜாதியாரின் கலிலேயாவில்" வாழ்ந்தனர் என்ற உண்மை, "சகல மக்களினத்திற்குமான" சுவிசேஷ செய்தியின் உலகளாவிய இயல்பை முன்னிழல் இட்டது (28:19; காண்க 1:3; 2:1 ஆகியவற்றின் மீதான விளக்கங்கள்).

**வசனம் 17. அதுமுதல்** என்பது, இயேசுவின் செயல்பாடுகளில் ஒரு புதிய படிநிலையைச் சுட்டிக் காண்பிக்கிறது. **இயேசு பிரசங்கிக்கத் தொடங்கினார்** என்ற சொற்றொடர், அவர் தமது ஞானஸ்நானத்திற்கும் யோவான் சிறைவைக்கப்பட்டதற்கும் இடைப்பட்ட காலத்தில் பிரசங்கித்து இருந்ததில்லை என்று கருத்துத் தெரிவிப்பதில்லை, ஏனெனில் கலிலேயாவின் பிற பாகங்களில் அவர் பிரசங்கித்துக் கொண்டும் ஊழியம் செய்துகொண்டும் இருந்தார் என்று லூக்கா கூறுகிறார் (லூக்கா 4:14, 15). "யோவான் காவலில் வைக்கப்பட்ட பின்பு, இயேசு கலிலேயாவிலே வந்து, தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து" என்று மாற்கு 1:14 பதிவு செய்துள்ளது. "பிரசங்கிக்கத்

தொடங்கினார்" என்ற மத்தேயுவின் சொற்றொடர், இதற்கு முன்பு யோவான் பிரசங்கித்திராத பகுதிகளில் இயேசு பிரவேசித்தார் என்று அர்த்தப்படுகிறது. இது அவரது ஊழியத்தின் முதல் பகுதியின்போது, அவரது வெளியரங்கமான போதனையின் தொகுப்புரையாகச் செயல்படுகிறது.

*மக்கள் **மனந்திரும்பும்படி** இயேசு அழைத்தார், மனந்திரும்புதல் என்ற வார்த்தை மாற்றம் பெற்ற வாழ்விற்கு வழிநடத்துகிற, மன மாற்றத்தைக் குறிக்கிறது. **பரலோக இராஜ்யம் சமீபித்து இருந்தபடியால்** மக்கள் மனந்திரும்ப வேண்டியது அவசியமாயிருந்தது. அந்த வேளையில் இராஜ்யம் வந்திருக்கவில்லை, ஆனால் அதன் வருகை சமீபித்து இருந்தது. மனந்திரும்புதல் என்பது, தேவனுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசிக்க விரும்புபவர்களுக்கு முற்றிலும் அத்தியாவசியமானதாக உள்ளது (லூக்கா 13:3, 5; நடபடிகள் 2:38; 17:30). ஜேக் P. லூயிஸ் அவர்கள், "இவ்விஷயத்தில், பிரசங்கிக்கப்பட்ட இயேசுவின் செய்தி, யோவான் ஸ்நானனால் முன்னதாக அறிவிக்கப்பட்டதையும் (மத்தேயு 3:2) பிற்பாடு அவரது சொந்த சீஷர்களால் அறிவிக்கப்பட்டதையும் எடுத்துரைக்கிறது" என்று விளக்கம் அளித்தார் (மத்தேயு 10:7).[6]*

## *முதல் சீஷர்களை அழைத்தல் (4:18-22)*

***[18]இயேசு கலிலேயாக் கடலோரமாய் நடந்துபோகையில், மீன்பிடிக்கிறவர்களாயிருந்த இரண்டு சகோதரராகிய பேதுரு என்னப்பட்ட சீமோனும், அவன் சகோதரன் அந்திரேயாவும், கடலில் வலைப்போட்டுக் கொண்டிருக்கிறபோது, அவர்களைக் கண்டு: [19]என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார். [20]உடனே அவர்கள் வலைகளை விட்டு, அவருக்குப் பின்சென்றார்கள். [21]அவர் அவ்விடம் விட்டுப் போகையில், வேறே இரண்டு சகோதரராகிய செபெதேயுவின் மகன் யாக்கோபும், அவன் சகோதரன் யோவானும் தங்கள் தகப்பன் செபெதேயுவுடனே படவிலிருந்து, தங்கள் வலைகளைப் பழுதுபார்த்துக்கொண்டிருக்கிறபோது, அவர்களைக் கண்டு, அவர்களையும் அழைத்தார். [22]உடனே அவர்கள் படவையும் தங்கள் தகப்பனையும் விட்டு அவருக்குப் பின் சென்றார்கள்.***

*இயேசு தமது சீஷர்களில் முதல் நால்வரை எவ்வாறு தேர்ந்துகொண்டார் என்பதை, மத்தேயு சுவிசேஷ விபரம் கூறுகிறது. சகோதரர்களின் இரு இணைகள் இயேசு அழைத்தல் பற்றிய இணை வரலாறுகளில் தரப்பட்டுள்ளன: பேதுரு மற்றும் அந்திரேயா (4:18-20) மற்றும் யாக்கோபு மற்றும் யோவான் (4:21, 22). இந்த வரலாறுகளில் ஒரே விதமான கூறுகள் அடங்கியுள்ளன: (1) இயேசுவின் பயணம், (2) சகோதரர்களை அவர் உற்று நோக்குதல், (3) அவர்களின் மீன்பிடி செயல்கள், (4) சீஷத்துவத்திற்கு இயேசுவின் அழைப்பு மற்றும் (5) சீஷர்களின் பதில் செயல்.[7]*

*இது இந்த மனிதர்களில் குறைந்த பட்சம் இருவரையாவது இயேசு எதிர்கொண்டிருந்த முதலாவது வேளையாக இருக்கவில்லை. பேதுருவும் அந்திரேயாவும், பிலிப்பு மற்றும் நத்தானியேல் ஆகியோருடன், அவரது ஞானஸ்நானத்திற்குப் பின் அவர் கலிலேயாவுக்குத் திரும்பிய வேளையில்*

அவருடன் துணையாக இருந்தனர் (யோவான் 1:35-45). கலிலேயாவின் கானாவூரில் இயேசு தமது முதல் அற்புதத்தை நிகழ்த்தியபோது, அந்த வசனப்பகுதியில், குறைந்த பட்சம் நான்கு சீஷர்கள் அவருடன் இருந்தனர் என்று குறிப்பிடப் பட்டுள்ளனர் (யோவான் 2:1, 2).

சீஷர் என்பவர் தாம் பின்பற்றுபவரை “பின்தொடருபவராக” அல்லது ஒரு “மாணவராக” இருக்கிறார். மாணவர்கள் ஒரு போதகரைத் தேடுதல் என்பது யூதர்கள் மத்தியில் பொதுவானதாக இருந்தது,[8] ஆனால் இயேசு செய்தது போன்று, ஒரு போதகர் சீஷர்களைத் தேடுதல் என்பது அசாதாரணமானதாக இருந்தது (யோவான் 15:16).[9] இயேசுவின் ஊழியத்தினுடைய தொடக்கப் பகுதியில், அவர் எண்ணற்ற சீஷர்களைக் கொண்டிருந்தார். திரளான கூட்டம் அவரைப் பின்பற்றியது. அவர்களில் எழுபது பேர்களை, இந்த வேளையில் அவர், யூத நகரங்கள் சிலவற்றைத் தாம் பார்வையிடத் திட்டமிட்டு இருந்தபடியால், வழியை ஆயத்தப்படுத்தும்படி, “குறிப்புக் கட்டளை” கொடுத்து அனுப்பினார் (லூக்கா 10:1). ஒரு இடத்தில், சீஷர்களின் இந்தப் பெரிய குழுவில் இருந்து, இயேசு தமது அப்போஸ்தலர்கள் ஆகும்படி பன்னிரெண்டு பேர்களைத் தேர்ந்தெடுத்தார் (லூக்கா 6:13-16; காண்க மத்தேயு 10:1-4). அவர்களை அவர் தேர்ந்துகொண்டு, கட்டளையிட்டு, தமது சார்பாகச் செயல்படும்படியான அதிகாரத்துடன் அவர்களை அனுப்பியதால், அவர்களை “அப்போஸ்தலர்கள்” என்று அழைத்தார். இயேசு தேர்ந்துகொண்ட பன்னிரெண்டு மனிதர்களும், அவருக்குச் சாட்சி அளிப்பதற்கென்று அவரது சொந்தத் தூதர்கள் ஆயினர் (நடபடிகள் 1:8). 4:18-22ல் இயேசுவினால் அழைக்கப்பட்ட நான்கு சீஷர்களும், அவருக்கு மிகவும் நெருக்கமான அப்போஸ்தலர்கள் ஆயினர் (17:1; 26:37; மாற்கு 5:37; 13:3).

**வசனம் 18. சீமோனையும்** அவரது சகோதரர் **அந்திரேயாவையும்** இயேசு சந்தித்தபோது, அவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் பயன்படுத்திய **வலை,** உருவகத்தில் வட்டமாகவும் இரும்புக் குண்டுகளால் கனமாக்கப் பட்டதாகவும் இருந்திருக்கும்.[10] இந்த மனிதர்கள், யாக்கோபு, யோவான் மற்றும் அவர்களின் தந்தை செபதேயு ஆகியோருடன், மீன்பிடிக்கும் வர்த்தகத்தைச் செய்து வந்தனர் (மாற்கு 1:20; லூக்கா 5:7, 10). சீமோனும் அந்தி ரேயாவும் பெத்சாயிதா ஊரில் இருந்து வந்தவர்கள் (யோவான் 1:44), ஆனால் அவர்கள் சமீபத்தில் தங்கள் குடியிருப்பைக் கப்பர்நகூமுக்கு மாற்றியிருந்தனர் (8:5, 14; மாற்கு 1:21, 29; லூக்கா 4:31, 38).

இயேசு, சீமோனுக்கு, ‘‘பாறை’’ என்று அர்த்தப்படும், ‘‘கோபா’’ (அரமாயிக் மொழி) அல்லது **பேதுரு** (கிரேக்க மொழி) என்ற பெயரைக் கொடுத்தார் (யோவான் 1:42). அவர் “நம்பிக்கை நிறைந்த, தைரியமான, தன்னம்பிக்கையான, ஊக்கமான, தூண்டுதல் உள்ள, விறுவிறுப்பான, பலமான மற்றும் அன்பு காட்டுகிற மற்றும் தமது எஜமானருக்கு உண்மையுள்ள, சிலுவையில் அறையப்படுதலுக்கு முன்பாகத் அவரது பாதுகாப்பின்மையைப் பொறுத்துக்கொள்ளாத நபர்” என்று சித்தரிக்கப்பட முடியும்.[11]

“அந்திரேயா” என்பது “வீரம்” அல்லது “ஆணுக்குரிய” என்று அர்த்தப்படுகிற கிரேக்கப் பெயராகும். கிறிஸ்துவைப் பின்பற்றிய பன்னிருவரில் இவரே முதலாமவராகக் காணப்படுகிறார் (யோவான் 1:40). இவர் இயேசுவுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட உடனே, அவர் சென்று தமது சகோதரர் சீமோனைக்

*கண்டு, அவரைக் கிறிஸ்துவினிடம் அழைத்து வந்தார் (யோவான் 1:41, 42). இவர், "சீமோன் பேதுருவின் சகோதரன்" என்று மாத்திரம் அடிக்கடி குறிப்பிடப்படுகிறார் (யோவான் 1:40; 6:8; காண்க மத்தேயு 10:2; லூக்கா 6:14), ஆனால் பேதுருவைத் தவிர, இயேசுவினிடத்தில் மக்களைக் கூட்டிவருதலுக்காக இவர் மாத்திரம் குறிப்பிடத் தக்கவராக இருக்கிறார் (யோவான் 6:8, 9; 12:20-22). அந்திரேயா, வெளிச்சக் கண்ணோக்கும் சுயநலம் இன்மையும் பண்பாகக் கொண்டவராக இருக்கிறார்.*

***வசனம் 19.*** *பேதுரு மற்றும் அந்திரேயா ஆகியோரிடத்தில்,* ***"என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்"*** *என்பதே இயேசுவின் கூற்றாக இருந்தது. "பின்னே வாருங்கள்" என்று மொழிபெயர்க்கப் பட்ட வார்த்தை, கிரேக்க மொழியில் இடத்திற்கான வினையுரி சொல்லாக உள்ளது, இது பலமான கட்டளையின் செயல்விளைவைக் கொண்டுள்ளது. "என் பின்னே வாருங்கள்" என்ற சொற்றொடர், "எனக்குப் பின்னாக வாருங்கள்" என்றும் மொழிபெயர்க்கப்பட முடியும். மாணவர்கள் தங்கள் ரபீக்களிடத்தில் கற்றுக்கொள்வதற்காக, இடத்திற்கு இடமாக, அவர்களை நேரடியாகப் பின்தொடருதல் என்பது பொதுவான விஷயமாக இருந்தது. "உங்களை ... ஆக்குவேன்" என்பது, வரவிருந்த ஊழியத்திற்கு அவர்களை இயேசு தகுதிப்படுத்துவார் என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது.*

*இந்த சகோதரர்கள் மீன்களைப் பிடிக்கும் மீனவர்களாக இருந்தனர், ஆனால் இவர்கள் "மனிதர்களைப் பிடிப்பவர்கள்" ஆவார்கள். லூக்கா சுவிசேஷத்தில் இதே நிகழ்வைச் சித்தரிப்பதாகத் தோன்றும் வசனப்பகுதியில் (லூக்கா 5:1-11) லூக்கா சில விபரங்களைக் கூடுதலாகக் கூறுகிறார். திகைக்க வைக்கும் - அவர்களின் படகுகள் மூழ்கிப்போகக் கூடும் - அளவுக்கு மீன்பிடித்த பின்னர் சீமோனிடம் இயேசு, "பயப்படாதே, இதுமுதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய்" என்று கூறினார் (லூக்கா 5:10). மனிதர்களைப் பிடிக்கும் உருவகம், பழைய ஏற்பாட்டில் அதன் வேர்களைக் கொண்டுள்ளது, அதில் மக்களை ஒன்றுகூட்டுதல், நியாயத்தீர்ப்பின் நோக்கம் கொண்டிருந்தது (எரேமியா 16:16; ஆமோஸ் 4:2; ஆபகூக் 1:14-17). புதிய ஏற்பாட்டில் இந்த உருவகம் இரட்சிப்புக்குரியதாக, தேவனுடைய இராஜ்யத்திற்கு மக்களைத் தரவழைத்தலாக உள்ளது. 13:47ன் உவமையானது, சுவிசேஷ வலையை விரித்து, கிறிஸ்துவுக்கென்று முடிந்த அளவுக்கு மக்களைப் பிடித்தல் என்ற செய்தியை கூறுகிறது.[12] ஒரு விளக்கவுரையாளர்கள், "ஏரியில் இருந்து மீன்களைப் பிடித்தல் என்பது பற்றிக் கேள்வி இனியும் இருப்பதில்லை, ஆனால் பாவம் மற்றும் மரணம் ஆகியவற்றின் படுகுழியில் இருந்து மனிதர்களை இழுத்து, தேவனுடைய மாபெரும் வலையால் அவர்களைப் பிடித்தல் என்பதே விஷயமாக உள்ளது!" என்று கூறினார்.[13] பிரதான கட்டளையில் இது முதலில் அப்போஸ்தலர்களுக்குத் தரப்பட்டது, ஆனால் அவரது பின்பற்றாளர்கள் இதை "உலகத்தின் முடிவுபரியந்தம்" கடைப்பிடிக்க வேண்டும் (28:20) என்ற நோக்கங் கொண்டுள்ளது - இதுவே தமது சீஷர்கள் எல்லார்மீதும் தாம் கொண்டுள்ள விருப்பம் என்று இயேசு தெளிவாக்கினார்.*

***வசனம் 20.*** *பேதுரு மற்றும் அந்திரேயா ஆகியோர் தங்கள் எஜமானாரின் அழைப்பிற்குக் கொடுத்த பதில்செயல் உடனடியானதாக இருந்தது.* ***உடனே அவர்கள் வலைகளை விட்டு, அவருக்குப் பின்சென்றார்கள்*** *என்று மத்தேயு*

*கூறுகிறார். 4:18ம் வசனத்தில் உள்ள குறிப்பிடத்தக்க சொற்றொடர் போலின்றி, இவ்வசனத்தில் ''வலைகள்'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை, அதிகம் பொதுப்படையானதாகவும் பல்வேறு வகைகளைத் தனக்குள் உள்ளடக்குவதாகவும் இருக்கிறது.*

*லூக்கா 5:11ம் வசனம், ''எல்லாவற்றையும் விட்டு, அவருக்குப் பின்சென்றார்கள்'' என்று கூறுகிறது. பிற்பாடு பேதுரு, தாங்கள் செய்திருந்த தியாகத்தை "எல்லாவற்றையும்" என்ற வார்த்தையைக் கொண்டு விவரித்தார்: "இதோ, நாங்கள் எல்லாவற்றையும் விட்டு, உம்மைப் பின்பற்றினோமே; எங்களுக்கு என்ன கிடைக்கும் என்றான்?" (19:27). அவரது சீஷர்களாக இருப்பதற்காக எவற்றையெல்லாம் அவர்கள் விட்டார்களோ, அவற்றைக் காட்டிலும், அவர்களுக்குக் கிடைக்கும் ஆசீர்வாதங்கள் மிகவும் அதிகமாக இருக்கும் என்று இயேசு மறுபடியும் உறுதிப்படுத்தினார் (19:28-30).*

***வசனங்கள் 21, 22.** இயேசு **யாக்கோபுவையும் யோவானையும்** அணுகியபோது, இந்த **சகோதரர்கள்** தங்கள் **தகப்பன் செபெதேயுவுடனே படவிலிருந்து, தங்கள் வலைகளைப் பழுதுபார்த்துக் கொண்டிருந்தனர்.** ''பழுதுபார்த்து'' என்ற வினைச்சொல், ''மீளக்கட்டுவித்தல்'' அல்லது ''ஒழுங்காக்குதல்'' என்று அர்த்தப்படுகிறது. மீனவர்களின் வலைகளைப் பொறுத்த மட்டில் இவ்வார்த்தை, வலைகளைச் சுத்தப்படுத்துதல் அல்லது மடித்தல் என்பதை உள்ளடக்கக் கூடும்.*

***அவர்களையும் அழைத்தார்** என்று மாத்திரமே வேதவசனப் பகுதி கூறுகிறது. அவர்களிடம் அவர் என்ன கூறினார் என்று நமக்கு இவ்விடத்தில் கூறப்படவில்லை என்றாலும், அவர் மற்ற இருவரிடம் கூறிய அதே விஷயத்தை இவர்களிடமும் கூறினார் என்று நாம் யூகிப்பது நியாயமானதாக உள்ளது: "என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்" (4:19). பேதுரு மற்றும் அந்திரேயா ஆகியோரைப் போன்றே அவர்களும் பதில் செயல் செய்தனர்: **உடனே அவர்கள்** வலைகளை விட்டு, **அவருக்குப் பின்சென்றார்கள்.** அவரது அப்போஸ்தலர்கள் ஆவதற்காக, அவர்கள் - தங்கள் மீன்பிடித் தொழில், இல்லங்கள் மற்றும் குடும்பங்கள் ஆகிய - எல்லாவற்றையும் விட்டுச் சென்றனர் (19:27-30).*

*யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோரின் தந்தையான செபதேயுவை, வேதவசனத்தில் நாம் நேரடியாகச் சந்திக்கும் இடம் இது ஒன்று மாத்திரமே ஆகும். அவரது பெயர், "யாவேயின் கொடை" யென்று அர்த்தப்படுகிறது. அவரது மனைவி சலோமி, இயேசுவின் தாயாகிய மரியாளின் சகோதரியாக இருந்திருக்கலாம் (27:56; மாற்கு 15:40; யோவான் 19:25). இது உண்மையாக இருக்கும் என்றால், யாக்கோபுக்கும் யோவானுக்கும் இயேசு ஒன்றுவிட்ட சகோதரராக இருந்தார் என்றாகிறது. உடல்ரீதியான இந்த உறவுமுறை, அவர்கள் அவ்வளவு விரைவாக அவரைப் பின்பற்றியது ஏன் என்பதையும் அவர்களின் தந்தை அவர்களுக்கு மறுப்புக்கூறியதாகக் காணப்படாதது ஏன் என்பதையும் விளக்க உதவலாம்.*

*யாக்கோபுவும் யோவானும், "இடிமுழக்கத்தின் மக்கள்" என்று அர்த்தப்படும். "பொவனெர்கேஸ்'' என்று பட்டப்பெயர் கொண்டிருந்தனர் (மாற்கு 3:17). இயேசுவைப் புறக்கணித்த சமாரிய நகரம் ஒன்றின் மீது அக்கினி இறங்கிவரச் செய்ய அவர்கள் விரும்பியபோது, அவர்களின் துரிதமான மற்றும் கடுமையான*

*உணர்வுவெளிப்பாடு காட்சிப்படுத்தப்பட்டது (லூக்கா 9:51-56). யாக்கோபும் யோவானும் பேராவல் கொண்டவர்களாகவும் சித்தரிக்கப் பட்டுள்ளனர். அவர்களின் தாயார் மூலமாக அவர்கள், இராஜ்யத்தில் தங்களுக்கு முதன்மை இடங்களைத் தரும்படி இயேசுவிடம் வேண்டுகோள் விடுத்தனர் (20:20-28; மாற்கு 10:35-45). இயேசுவுடன் அவர்கள் செலவிட்ட காலம் அவர்களின் வாழ்வை மாற்றியது. யோவான் "இயேசுவுக்கு அன்பானவனாயிருந்த ஒருவன்" என்று அறியப்பட்டார் (யோவான் 13:23; 20:2; 21:7, 20-24), மற்றும் வேதசாட்சியாக மரணம் அடைந்த அப்போஸ்தலர்களில் யாக்கோபு முதலாமவர் ஆனார் (நடபடிகள் 12:1, 2).*

## *கலிலேயாவில் தொடக்ககால ஊழியம் (4:23-25)*

***[23]பின்பு, இயேசு கலிலேயா எங்கும் சுற்றி நடந்து, அவர்களுடைய ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கிச் சொஸ்தமாக்கினார்.***

***[24]அவருடைய கீர்த்தி சீரியா எங்கும் பிரசித்தமாயிற்று. அப்பொழுது பலவித வியாதிகளையும் வேதனைகளையும் அடைந்திருந்த சகல பிணியாளிகளையும், பிசாசுபிடித்தவர்களையும் சந்திரரோகிகளையும், திமிர்வாதக்காரரையும் அவரிடத்தில் கொண்டுவந்தார்கள்; அவர்களைச் சொஸ்தமாக்கினார். [25]கலிலேயாவிலும் தெக்கப்போலியிலும், எருசலேமிலும். யூதேயாவிலும், யோர்தானுக்கு அப்புறத்திலும் இருந்து திராளான ஜனங்கள் வந்து, அவருக்குப் பின்சென்றார்கள்.***

*இப்போது மத்தேயு, தொடக்க காலத்தில் இயேசுவின் கலிலேய ஊழியத்திற்குத் திரும்பினார். அவர் தமது சுவிசேஷம் முழுவதிலும், சுருக்கமான தொகுப்புரைகளைச் சொருகினார் (4:23-25; 8:16, 17; 9:35; 12:15, 16; 14:14, 35, 36; 15:29-31; 19:1, 2; 21:14).*

***வசனம் 23.** இது இயேசு, பலஸ்தீனத்தின் வடக்குப் பகுதியாக இருந்த (காண்க 4:15ன் மீதான விளக்கங்கள்) **கலிலேயா** முழுவதிலும் மேற்கொண்ட பல சுற்றுகளில் முதலாவதாக உள்ளது (காண்க 9:35-11:1; லூக்கா 8:1-3). இந்தப் பகுதியின் மக்கள்தொகையில் பெருமளவு புறஜாதியார் இருந்தாலும், இயேசுவின் **போதனையும்** பிரசங்கித்தலும் **ஜெப ஆலயங்களிலேயே** செய்யப்பட்டது (9:35; 12:9; 13:54) என்பது தெளிவு, இது அவரது ஊழியம் யூதர்களுக்கு மாத்திரம் எல்லைக்குட்பட்டதாக இருந்தது என்பது அடிக்கோடிடப் படுகிறது (10:5, 6; 15:21-28).*

*தற்போது, ஜெப ஆலயங்கள் கி.மு. 200ம் ஆண்டுவரையிலும் வரலாற்றுப் பதிவேடுகளில் குறிப்பிடப்படவில்லை என்றாலும், அவைகள் பாபிலோனிய அடிமைத்தனத்தின்போது பயன்பாட்டிற்கு வந்தன என்று நம்பப்படுகிறது.[14] அவைகள் யூத மார்க்க வாழ்வின் மையமாக வடிவமைந்தன. இவைகள் அந்த நாட்களின் "சபைகளாக" இருந்தன, இங்கு ஓய்வு நாட்களில் வேத வசனங்கள் வாசிக்கப்படுவதையும் கலந்துரையாடப்படுவதையும் கேட்பதற்கு மக்கள் சபையாக ஒன்று கூடுவார்கள். மிஷ்னாவின்படி, பத்து யூத ஆண்கள்*

வாழும் எந்த ஒரு இடத்திலும், ஒரு ஜெப ஆலயம் ஏற்படுத்தப்பட முடியும்.[15] கி.பி. 70ல் எருசலேம் நகரத்தின் அழிவிற்கு முன்னர், எருசலேமில் 480 ஜெப ஆலயங்கள் பயன்பாட்டில் இருந்தன என்று எருசலேம் தல்மூத் புத்தகம் பதிவு செய்துள்ளது[16]; பாபிலோனிய தல்மூத் புத்தகம், 394 ஜெப ஆலயங்கள் இருந்ததாகக் கூருகிறது.[17]

கொள்கைப்படி ஜெப ஆலயம் நகரத்தில் மையத்தில், ஒரு குன்றின்மீது எல்லாராலும் சுலபமாகக் காணும்படி அமைக்கப்பட்டது.[18] இருந்தபோதிலும் இந்த நடைமுறை எப்போதுமே சாத்தியமானதாக இருக்கவில்லை. சடங்காச்சாரமான கழுவுதல்களுக்கு வசதியாக, ஆறு அல்லது கடலுக்கு அருகில் ஜெப ஆலயத்தை அமைத்தல் என்பது இன்னொரு விருப்பநோக்காக இருந்தது.

ஜெப ஆலயம் "தலைவர்(கள்)" அல்லது "அதிகாரி(கள்)" என்பவர்களால் தலைமை வகித்து நடத்தப்பட்டது (மாற்கு 5:22; லூக்கா 8:41; நடபடிகள் 18:8, 17). ஆராதனை ஊழியங்களை ஒழுங்கு படுத்துதல் மற்றும் ஒழுங்கு முறையைப் பராமரித்தல் ஆகியவை இந்தத் தலைவர்களின் பொறுப்புகளாக இருந்தன (லூக்கா 13:14). நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கதரிசனம் ஆகியவை வாசிக்கப்பட்ட பின்பு, பார்வையாளராக வந்திருக்கும் ரபி ஒருவர், முன்பாக வந்து சபைக்கு உரையாற்றும்படி, அவரை ஜெப ஆலயத்தலைவர் அழைப்பார் (நடபடிகள் 13:15; காண்க லூக்கா 4:16-27). இந்தப் பழக்கம், மக்களிடம் பேசுவதற்கு இயேசுவுக்கும் அவரது அப்போஸ்தலர்களுக்கும் வாய்ப்புக்களைத் தந்தது.

இயேசு வேதவசனங்களில் இருந்து போதித்துக் கொண்டிருந்தார், ஆனால் அவர் **ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக் கொண்டும் இருந்தார்.** "சுவிசேஷம்" என்ற வார்த்தை, "நற்செய்தி" என்று அர்த்தப்படுகிறது. இது 17ம் வசனத்தில் குறிப்பிடப்பட்ட அதே செய்தியாக இருக்கலாம்: "மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது." இராஜ்யம் இன்னமும் தோன்றாதிருக்கையில், அது சமீபித்திருந்தது மற்றும் இயேசு எவர்களிடத்தில் பேசினாரோ, அவர்களில் சிலருடைய வாழ்நாள் காலத்திலேயேகூட, விரைவில் வரவிருந்தது (காண்க மாற்கு 9:1). இந்தச் செய்தியை இயேசு, "அவர் எடுத்துக்கொள்ளப்பட்ட நாள் வரைக்கும்" அறிவித்தார் மற்றும் அவர், "தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை அவர்களுடனே பேசினார்" (நடபடிகள் 1:2, 3).

அவர் பிரசங்கித்துக் கொண்டும் போதித்துக் கொண்டும் மாத்திரம் இராமல், அவர் ஜனங்களுக்கு உண்டாயிருந்த **சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கிச் சொஸ்தமாக்கினார்.** இயேசுவின் அற்புதங்கள் அவரை யோவான் ஸ்நானனில் இருந்து வித்தியாசப்படுத்திய விஷயத்தின் பாகமாக இருந்தன. யோவான் அற்புதங்கள் எதையும் நிகழ்த்தவில்லை. இயேசு எவ்வகையான வியாதியையும் அல்லது நோய்களையும், அதன் ஆதாரமூலம் அல்லது தோற்றுவாய் எதுவாக இருந்தாலும், அவற்றைக் குணமாக்கக் கூடியவராக இருந்தார். அவரது முழுமையான குணமாக்கும் வல்லமை, அவர் தேவனிடத்தில் இருந்து அனுப்பப்பட்ட மேசியாதான் என்பதற்கு அடையாளமாகப் பயன்பட்டது (11:2-6).

**வசனம் 24.** இந்த அற்புதங்களின் நேரடி விளைவாக, இயேசுவின் கீர்த்தி

***சீரியா எங்கும்*** *பிரசித்தமாயிற்று. முதல் நூற்றாண்டில், "சீரியா" என்பது, பலஸ்தீனம் முழுவதையும் உள்ளடக்கியிருந்த, பெரியதொரு ரோமானிய மாகாணத்தைக் குறித்தது (லூக்கா 2:2). இந்தக் குறிப்புபெயர் இவ்விடத்தில் கலிலேயாவிற்கு வடக்கில் இருந்த நாட்டை மாத்திரம் குறிக்கிறது என்று சிலர் நம்புகையில், இது 4:25ல் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகள் எல்லாவற்றையும் சூழ்ந்து கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது.*

*இயேசுவின் கீர்த்தி, அப்பகுதியில் இருந்த எல்லா மக்களும் தங்களிடம் இருந்த,* ***பிசாசு பிடித்தவர்கள்; சந்திரரோகிகள், திமிர்வாதக்காரர்*** *உட்பட, வியாதிப்பட்ட மற்றும் நோய்வாய்ப்பட்ட எல்லாரையும் அவரிடத்தில் கொண்டுவரக் காரணமாயிற்று. இயேசு எல்லா வகையான நிலைகள் மீதும் அதிகாரம் கொண்டிருந்தார் மற்றும் அவரது குணமாக்கும் வல்லமை வரையறைக்கு உட்படவில்லை என்பதைக் காண்பிப்பதற்காகவே, இந்தப் பல்வகையான மக்கள் இங்கு குறிப்பிடப் பட்டுள்ளனர் என்பது அதிகம் சாத்தியமானதாக உள்ளது.*

***வசனம் 25.*** *இயேசு சென்ற இடங்களுக்கெல்லாம் மக்கள் அவரைப் பின்தொடரலாயினர் என்பது இயேசுவின் கீர்த்தியினுடைய இன்னொரு விளைவாக இருந்தது. இந்தக் கூட்டத்தினர்,* ***கலிலேயாவில்*** *இருந்து மாத்திரமல்ல, ஆனால் பலஸ்தீனத்தின் எல்லாப் பகுதிகளிலும் இருந்து வந்தனர்.*

***தெக்கப்போலி*** *என்பது யோர்தானுக்கு அப்பால் இருந்த ஒரு மாவட்டம் ஆகும், இதன் கிரேக்கப் பெயரினுடைய அர்த்தத்தின்படி, இது பத்து நகரங்களை உள்ளடக்கியிருந்தது. கிரேக்கக் கலாச்சாரம் கொண்ட இந்த நகரங்கள், தமஸ்கு, பிலதெல்பியா, ரப்னா, ஸ்கைதோபோலி (பெத்ஷேன்), கடாரா, ஹிப்போஸ், டியோன், பெல்லா, கெராசா மற்றும் கனாதா ஆகியவை என்று, மூத்த பிளீனி என்பவரால் அடையாளப்படுத்தப் பட்டன.*[19] *தெக்கபோலி முழுவதும், மகா அலெக்சாண்டரின் படையில் இருந்த போர்க்கலையில் நீண்டநாள் அனுபவம் கொண்டவர்களால் நிறைந்திருந்தது என்று பொதுவாக நம்பப்பட்டுள்ளது, இவர்கள் அங்கு கிரேக்கத்தின் அடிப்படைக் கலாச்சாரத்தைப் பராமரிப்பதில் உதவிக்கொண்டிருந்தனர். யோர்தானுக்கு மேற்கில் இருந்த ஸ்கைதோபோலி தவிர, இந்த நகரங்கள் யாவும் யோர்தானுக்குக் கிழக்கில் இருந்தன.*

*இயேசு கூறுவதைக் கேட்பதற்கு, மக்கள் கூட்டங்கள் பயணித்த பெரும் தூரங்கள் பற்றி மத்தேயு வலியுறுத்துகையில், அவர்* ***எருசலேமிலும், யூதேயாவிலும், யோர்தானுக்கு அப்புறத்திலும்*** *இருந்து ("யோர்தானுக்கு அக்கரைப் பகுதி"; NIV) ஆகியவற்றைக் குறிப்பிட்டார். இந்தக் கடைசிச் சொற்றொடர் பெரேயாவைக் குறிக்கிறது.*

✧✧✧✧✧ ***பாடங்கள்*** ✧✧✧✧✧

## இழந்துபோகப்பட்டவர்களை அடைவதற்கு தேவனுடைய திட்டம்: பிரசங்கித்தல் (4:12-25)

இயேசு ஞானஸ்நானம் பெற்றது மற்றும் அவருக்கு நேர்ந்த சோதனைகள் ஆகியவற்றிற்குப் பின்பு, அவர் பிரசங்கித்தல், போதித்தல் மற்றும் குணமாக்குதல் ஆகியவற்றைக் கொண்டு, கலிலேயாவில் தமது ஊழியத்தைத் தொடங்கினார்.

*மேலும் அவர், தமது சீஷர்களாவதற்குச் சில மீனவர்களை அழைத்தார். நமது வேதவசனப் பகுதியில் இருந்து நாம், பின்வரும் முக்கியமான பாடங்களைக் கற்றறிய முடியும்:*

1. *வசனத்தைப் பிரசங்கித்தல் என்பதே இழந்துபோன மனித குலத்தை அடைவதற்கான தேவனுடைய திட்டமாயிருக்கிறது (4:12-17).*
2. *நமக்கு முன்னோடினவர்களின் இடங்களை நாம் நிரப்ப வேண்டும் (4:12, 17).*
3. *தேவனுடைய திட்டம் தொடர்ந்து செயல்படுவதற்கு, நமது இடங்களில் இருந்து பணிசெய்யும்படிக்கு, நாம் மற்றவர்களைத் தேர்வு செய்து அவர்களைப் பயிற்றுவிக்க வேண்டும் (4:18-22).*
4. *இயேசு தமது பிரசங்கித்தலில் முக்கியமானதாகக் கருதியவற்றின் மீது நாம் கவனம் குவிக்க வேண்டும் (4:17, 23).*
5. *உண்மையான அற்புதங்களுக்கும் இன்றைய நாட்களில் வஞ்சகர்களின் பொய்யான முயற்சிகளுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை நாம் புரிந்துகொள்ள வேண்டும் (4:23, 24).*

---

*குறிப்புகள்*

[1]Leon Morris, *The Gospel According to Matthew*, Pillar Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1992), 80. [2]*நாசரேத்தூரில் இயேசு புறக்கணிக்கப்பட்டதை, மத்தேயு 13:53-58 வசனப்பகுதி வரையிலும் அறிக்கை செய்வதில்லை.* [3]Donald A. Hagner, *Matthew 1-13*, Word Biblical Commentary, vol. 33A (Dallas: Word Books, 1993), 73. [4]Josephus *Life* 45; *Wars* 3.3.2. [5]Josephus *Life* 17. [6]Jack P. Lewis, *The Gospel According to Matthew*, Part 1, The Living Word Commentary (Austin, Tex.: Sweet Publishing Co., 1976), 74. [7]Hagner, 76. [8]Mishnah *Aboth* 1.16. [9]*மீனவர்களை இயேசு அழைத்ததற்கும். எலிசாவின் பண்ணை மற்றும் குடும்பத்தில் இருந்து அவரை எலியா அழைத்ததற்கும் இடையில் உள்ள ஒற்றுமை களைக் கவனியுங்கள் (1 இராஜாக்கள் 19:19-21).* [10]Lewis, 74.

[11]James M. Gray, “Peter, Simon,” in *The International Standard Bible Encyclopedia*, ed. James Orr (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1939), 4:2349. [12]Douglas R. A. Hare, *Matthew*, Interpretation (Louisville: John Knox Press, 1993), 31. *வலையின் உவமையில் (13:47-50), நல்ல மீன்களை (விசுவாசம் உள்ளவர்களை) மோசமான மீன்களில் (விசுவாசம் இல்லாதவர்கள்) இருந்து பிரித்து வகைப்படுத்துதலுக்கு, தூதர்கள் பொறுப்பாக இருக்கின்றனர்.* [13]Suzanne de Dietrich, *The Gospel According to Matthew*, trans. Donald G. Miller, Layman’s Bible Commentary, vol. 16 (Richmond, Va.: John Knox Press, 1961), 26. [14]Ecclesiasticus 51:23. [15]Mishnah *Megillah* 1.3; 4:3; *Sanhedrin* 1.6; *Aboth* 3.6. [16]Jerusalem Talmud *Megillah* 3.1. *மிஷ்னா மற்றும் ஜெமராவில் (மிஷ்னாவைப் பற்றிய ஒரு ஆய்வு) ஆகியவற்றில் இருந்து மேற்கோள்கள், (1) எருசலேம் தல்மூத் மற்றும் (2) பாபிலோனிய தல்மூத் (இந்த விளக்கவுரையில் “தல்மூத்” என்று குறிக்கப் பட்டுள்ளது) என்று ஒன்றாகத் தொகுக்கப்பட்டன.* [17]Talmud *Ketuboth* 105a. [18]Talmud *Shabbath* 11a. [19]Pliny *Natural History* 5.16.74.